நகர் ஊரமைப்பு துறை - விருதுநகர் மாவட்டம்

அச்சந்தவிழ்த்தான் ஊராட்சி


விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம், அச்சந்தவிழ்த்தான் ஊராட்சி/கிராமம், ச.எண்:-1126/1B,1127/1A1A,1A2,1B2B -இல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(திட்டமில்லாத பகுதி)

இணையதள விண்ணப்ப எண் : 9BZI541C/2025

அளவு : 1:400

வ



குறிப்புகள்:

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	-	6550.00 ச.மீ (அ) 1.618ஏக்கர்
மனைப்பிரிவு உத்தேச சாலையின் பரப்பளவு மூலை முடக்கு உட்பட	-	1936.18 ச.மீ
மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	-	4613.82 ச.மீ
பசுமை புல்வெளி-1+2 (30.96+36.90)	-	67.86 ச.மீ
மனைப்பிரிவு இடத்தின் எல்லை	-	
நிலையிலுள்ள சாலை	-	
மனைப்பிரிவு உத்தேச சாலை	-	
கோரிய மனைகளின் எண்ணிக்கை	-	36 எண்ணம்
ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை	-	36 எண்ணம்

பொது ஒதுக்கீடு: (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டது.)

(நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண்:4367/2019 நாள்: 05.02.2020 மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் -2019 விதி எண்: 41(1) மற்றும் 47(6)- ன்படி 10% பூங்கா பரப்பளவிற்கு இணையான கட்டணத் தொகையினை அரசு வழிகாட்டு மதிப்பின்படி மனுதாரரால் செலுத்தப்பட்டது.)

தானஆவண எண்:4114/2025 மற்றும் 4115/2025 நாள்:17.09.2025-ன் படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள், பசுமை புல்வெளி மற்றும் பொது ஒதுக்கீடுகள்: உள்ளாட்சிக்கு மற்றும் மின்வாரியத் துறைக்கும் ஒப்படைப்பு செய்யப்பட்டது.

உள்ளாட்சி உபயோகத்திற்கு -32.05ச.மீ (0.69%) =

தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழக (TANGEDCO) உபயோகத்திற்கு - 32.11ச.மீ (0.69%) =

கட்டிட வரம்பு:

7.2மீ அகலச்சாலைக்கு 1.50மீ விடப்பட வேண்டும்.

9.0மீ (மு) 12.0மீ அகலச்சாலைகளுக்கு 3.0மீ விடப்பட வேண்டும்.

மூலை முடக்கு

12.00மீ அகலச்சாலைகள் வரை 1.50மீ X 1.50மீ விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்:18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை(MA-1)நாள்:04.02.2019-ன் படி, உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

2. அரசாணை எண்:16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள்:31.01.2020-ன் படி, உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

3. அரசாணை எண்-71 ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சி துறை நாள்-16.09.2003-இன்படி மனுதாரரது நிலஉரிமம் குறித்து சரிபார்ப்பது உள்ளாட்சியின் பொறுப்பாகும். இம் மனைப்பிரிவின் தொழில் நுட்ப ஒப்புதலானது வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், அவர்களால் வழங்கப்பட்ட நிலஉரிமைச் சான்றின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

4. இம்மனைப்பிரிவு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் (ம) சான்றுகள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதலானது எவ்வித முன்னறிவிப்பின்றி நகர ஊரமைப்பு ஆணையர், சென்னை, அவர்களால் ரத்து செய்யப்படும்.

5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப் படவேண்டும்.

6. உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறையின் மூலம் உட்பிரிவு செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

7. 7. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப ஆவணங்களில் (கிரையப் பத்திரம் - குத்தகை பத்திரம் -பட்டா -தானப்பத்திரம்-பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

8. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.

9. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4'-அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

குறிப்பு :

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ம.வ /ந.உள.து.இ.(விருமா)எண்: 156/ 2025

அளவர்\ உதவி வரைவாளர் | வரைவாளர் நிலை-3 | மேற்பார்வையாளர் | உதவி இயக்குநர்

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Virudhunagar
Date:2026.02.19 18:38:11

Signature Not Verified
Signed by Village Panchayat President
Location:Virudhunagar
Date:2026.02.13 16:29:32

துணை இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
விருதுநகர் மாவட்டம்